(இ) ஆம் எனில், அவற்றின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லே.

(இ) விஞவிற்கு இடமில்லே.

திரு. கா. வேழவேந்தன்: பழவேற்காடு கழிமுகப் பகுதியில் ஏராளமான அளவுக்கு நல்ல வகையான கிளிஞ்சல்கள் கிடைக்கின்றன. ஆந்திரத்தின் எல்லேயில் அந்தக் கிளிஞ்சல்கள் ஏலம் விடப்படுவதால் கடத்தல் போன்றவை நடைபெறுகின்றன. ஆகவே, விரைவில் அரசு முடிவெடுத்து, இந்தக் கிளிஞ்சல்களேப் பயன்படுத்தி சில தொழிற்சாலேகளேத் துவக்குவதற்கு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதைப்பற்றி பரிசீலனே செய்து பார்த்ததில், ஸெல்லுலார் கான்க்ரீட் பிளாண்டுக்கு பயன்படுமா என்று பரிசீலித்ததில் பயன்படாது என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். இதற்காக ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து தொழிற்சாலே அமைக்க மாண்புமிகு அங்கத்தினர் முன்வருவார்களேயாளுல், உதவி செய்யலாம்.

திரு. சி. ஆறுமுகம்: செங்கற்பட்டு மாவட்டத்தில் மரக்காணம், சூணும்பேட்டு பகுதியிலே கிளிஞ்சல்கள் ஏராள்மாகக் கிடைக்கின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு இவைகளே ஏலம் விட்டார்கள். இப்பொழுது அதை நிறுத்திவிட்டார்கள். சுண்ணும்புத் தொழிற்சாலேயை அரசு பொதுத் துறையிலே ஆரம்பிப்பதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தப் பகுதியைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லே.

New Co-operative Sugar Mills

* 465 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether the three proposed sugar mills in the Co-operative sector have commenced producton; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இன்னும் இல்லே.

(ஆ) கேள்வி எழாது.

1973 நவம்பர் 28]

திரு. ஏ. சி. நரசிம்மன் : வட மாநிலங்களில் ரூ. 10 லட்சம் ஷேர் காபிட்டல் வசூல் செய்துவிட்டால் கூட உடனே மெஷினுக்கு ஆர்டர் செய்துவிடுகிறார்கள். வேலூர் கோவாபரேடிவ் ஷுகர் மில்லுக்கு ரூ. 20 லட்சம் ஷேர் காபிட்டல் வசூல் செய்துவிட்ட பிறகும் கூட, தமிழ் நாடு அரசு ரூ. 45 லட்சம் ஷேர் காபிட்டல் எடுத்தும்கூட, ஆக ரூ. 65 லட்சம் அளவுக்கு ஷேர் காபிட்டல் இருந்தும் கூட, இன்னும் மெஷினுக்கு ஆர்டர் செய்யப்படாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? ஏன் டிலே ஆகிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மூன்று ஆலைகளிலும் மாண்புமிகு அங்கத்தினரைத் தலைவராகக் கொண்ட வேலூர் ஆலை தான் அதிகமாக வசூல் செய்து தந்திருக்கிறது. அதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன். அவர் சொன்னது போல் அல்லாமல் மத்திய அரசு நிதி நிறுவனம் ஐ.எஃப்.ஸி. நாம் ஷேர் காபிட்டலாக ரூ. 55 லட்சம் சேர்த்தால் தான் பணம் தருவோம் என்ற ஒரு விதியைப் போட்டிருக்கிறார்கள். அதனால் தான் சிரமம் ஏற்பட்டிருக்கிறது. வேலூரைப் பொறுத்தவரையில் அரசாங்கம் ரூ. 45 லட்சம் கொடுத்திருக்கிறது. இப்பொழுது இயந்திரங்கள் வாங்குகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. முதலில் தயக்கம் காட்டியதற்குக் காரணம் பங்குத் தொகை வராது, பங்குத் தொகையை வசூலிக்க வேண்டும் என்று ஐ.எஃப்.ஸி வற்புறுத்தியது தான்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சர்க்கரை ஆலைகளை ஆரம்பிப்பதற்கு ஏதாவது திட்ட யோசனை உண்டா? அம்மாதிரி ஆரம்பிக்கப்பட்டால், அது எந்தெந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கப்படும்? தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய தஞ்சை மாவட்டத்தில் இன்னும் அதிகப்படியாக சர்க்கரை ஆலைகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எட்டு புதிய சர்க்கரை ஆலைகள் ஆரம்பிப்பதற்காகத் திட்டமிட்டிருக்கிறோம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில். தஞ்சை மாவட்டத்தில் தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று திட்டக் கமிஷன் ஆலோசனை கூறி உள்ளது.

[1973 நவம்பர் 28

(முற்பகல் 9.30)

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இப்போது ஆரம்பிக்கப் பட இருக்கும் சர்க்கரை ஆலைகள் காலதாமதம் செய்யப் படுவதினால் இயந்திரங்களின் விலை முன்பு இருந்ததைவிட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு உயர்ந்து கொண்டு போகின்றன. அதை முன்னிட்டு, மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, இயந்திரங்களையாவது உடனடியாக வாங்குவதற்கு ஆர்டர் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைத் தொடங்குவதில் ஏற்படுகின்ற காலதாமதத்திற்கு காரணம் அவைகளுக்கான பங்குத் தொகை வருவதில் கால தாமதம் ஏற்படுகிறது. அதன் காரணமாக மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறிய யோசனை பரிசீலனை செய்யப் பட்டிருக்கிறது. அதன்படி ஒரு புதிய கொள்கை உருவாக்கப் பட்டிருக்கிறது. திட்டமிடப்படுகின்ற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வது என்ற கொள்கையை மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசும் ஒப்புக் கொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, 8 சர்க்கரை ஆலைகள் புதிதாகத் திறக்கப்படும் என்று சொன்னார்கள். அவைகளில் சில இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற தென் மாவட்டங்களில் தொடங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இன்னும் எங்கெங்கே அமைப்பது என்று முடிவு செய்யப்படவில்லை. எந்தெந்த மாவட்டங்களில் கரும்பு அதிகமாகப் பயிரிட வாய்ப்பு இருக்கிறதோ, அங்கே பங்குத் தொகை சேர்ப்பதற்கும் வேண்டிய வாய்ப்பும் வசதியும் இருக்குமானால் அந்த மாவட்டங்கள் பரிசிலிக்கப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலை தொடங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது எப்போது ஆரம்பிக்கப்படும்? மற்றொன்று. பொதுவாக தென் மாவட்டங்கள் கரும்பு பயிரிட சிறந்த இடங்களாக இருக்கின்றன என்று சர்க்கரை ஆலை

1973 நவம்பர் 28]

நடத்துவதில் நல்ல அனுபவம் பெற்ற மகாலிங்கம் போன்றவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய மாநிலத்தில் தென் மாவட்டங்களில் சர்க்கரை ஆலைகளைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே 16 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. நம்முடைய தேவையைப் போல் இரண்டு மடங்குக்குமேல் உற்பத்தி செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி கோவையில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை தொடங்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் அதற்காகத் தேர்ந்தெடுத்த இடத்திற்கு தகராறு ஏற்பட்டதால் தாமதமானது. அதற்குப் பின் வேறொரு இடத்தைத் தேர்ந்தெடுத்தோம். மீண்டும் அந்த இடத்தை மாற்றலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. அதோடு, பங்குத் தொகை 5.48 லட்சம் ரூபாய்தான் வந்திருக்கிறது. ஐ.எஃப்.சி. கருத்துப்படி 55 லட்சம் ரூபாய் தேவை. சித்தூர் ஆலையிலே நம்முடைய கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பங்கு இருப்பதால் அந்த பங்குத் தொகையை நாம் பெறலாம் என்ற முயற்சி மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் சர்க்கரை ஆலை இல்லை. ஆகவே, திருநெல்வேலி மாவட்டத்திலாவது ஆரம்பிக்கப்பட இருக்கிற ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ நடவடிக்கை எடுக்கப் படுமா ? அதோடு மதுரையில் இருக்கிற சர்க்கரை ஆலை விரிவுபடுத்தப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய சர்க்கரை ஆலைகளை அமைப்பதுபற்றி முடிவு செய்யும்போது பரிசீலனை செய்யலாம். அலங்கநல்லூரில் இயங்கி வருகின்ற நம்முடைய கூட்டுறவு சர்க்கரை ஆலை மட்டும் லாபம் கிடைக்காத சூழ்நிலையில் இருக்கிறது. இப்போது ஒரு ஸ்பெஷல் ஆபீசர் போடப்பட்டு, அதை முன்னுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளோம்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, ஏற்கெனவே இயங்கி வருகின்ற சர்க்கரை ஆலைகளில் விலை குறைவாக இருப்பதாகவும், தனிப்பட்டவர்களால் நடத்தப்படுகின்ற சர்க்கரை ஆலைகளில் விலை அதிகமாக இருப்பதாகவும் விவசாயிகள் குறை சொல்லிக்

கொண்டிருக்கிறார்கள். இப்போது மேலும் நாம் புதிய சர்க்கரை ஆலைகளை துவக்க முயலுகிறோம். இந்த விலை வித்தியாசத்திற்கு மத்திய அரசின் தலையீடுதான் காரணம் என்று சொல்கிறார்கள். ஆலைகளில் உற்பத்தியாகின்ற சர்க்கரையில் 70 சதவிகிதத்தை மத்திய அரசு குறைந்த விலைக்கு எடுத்துக்கொண்டு, நமக்கு அதிக விலைக்குத் தருகிறார்கள் என்று நாம் அறிகிறோம். ஆகவே, புதிய ஆலைகளைத் துவக்குவதற்கு முன்னால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமென்று சொல்லி அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கரும்பு விலையையும், சர்க்கரை விலையையும் இணைத்துக் கூறுகிறார்கள் என்று கருதுகிறேன். கரும்பு விலையைப் பொறுத்த வரையில், இப்போது அதிக விலை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சர்க்கரை விலைப் பிரச்சனையைப் பற்றி ஏற்கெனவே விளக்கம் தந்திருக்கிறேன். அதற்காக புதிய ஆலைகளைத் துவக்கக் கூடாது என்று சொல்வது சரியல்ல.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்தியாவிலேயே நம்முடைய தமிழ் நாட்டில்தான் சர்க்கரை ஆலைகள் வருடத்தில் 220 நாட்கள் இயங்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதை எடுத்துச் சொல்லி, இன்னும் அதிக சர்க்கரை ஆலைகளை இங்கே தொடங்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுமா? வடாற்காடு மாவட்டத்தில் செய்யார், வந்தவாசி, போளூர் போன்ற இடங்களில் பல சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வடாற்காடு மாவட்டத்தில் தான் ஏற்கெனவே அதிகமான சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. செய்யார் தொகுதியிலும் போளூர் தொகுதியிலும் சர்க்கரை ஆலைத் தொடங்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அது பரிசீலனை செய்யப்படும்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, நாம் சர்க்கரை ஆலைகளை அதிகரிக்க அதிகரிக்க நாட்டிலே உணவு தானியப் பற்றாக்குறை ஏற்படும் என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் உணவுப் பற்றாக்குறை என்ற பிரச்சனை இல்லை. சர்க்கரை

1973 நவம்பர் 28]

ஆலைகள் அதிகரிக்கப்படுவதினால் அந்த நிலை ஏற்படுமானால், அது பரிசீலிக்கப்படும்.

Village Courts

* 466 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries, with reference to question No. 420 answered on the floor of the Assembly on 19th March 1973, be pleased to state the present stage of the proposal to establish Oor Needhi Mandrams?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஊர் நீதி மன்றங்களை ஏற்படுத்துவதற்கான சட்டத்தின் செயற்குறிப்பை அரசு இன்னும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், போன வருஷம் இதே கேள்விக்குப் பதில் சொல்லும்போது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். தாமதப்படுத்திக் கொண்டிருப்பதற்கு இதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அட்வகேட்கள் எதிர்ப்பதுதான் அதற்குக் காரணமா? அல்லது வேறு காரணமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்னதும் ஒரு காரணம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, ஏற்படுத்தப்போகும் ஊர் நீதிமன்றங்களின் அதிகாரங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றி ஏற்கெனவே இங்கே விளக்கப்பட்டிருக்கிறது. சிவில், கிரிமினல் வழக்குகளில் 'ஆனரரி மாஜிஸ்டிரேட்டு'களுக்கு இருக்கின்ற அதிகாரங்களோடு பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு இருக்கின்ற சிவில் அதிகாரங்களையும் இணைத்துக் கொடுக்கலாம் என்பது சட்டத்தின் நோக்கம். உயர் நீதிமன்றம், வழக்கறிஞர்கள் தந்துள்ள கருத்துக்கள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. பரந்தாமன் : கிராமங்களில் சிறிய சிறிய சச்சரவுகளுக்கு எல்லாம் கூட நீதிமன்றங்களுக்குச் சென்று அதிகமான பணத்தைச் செலவிடுகிறார்கள். அதைத் தவிர்க்க, இப்படிப்பட்ட

TRUTH ALONE TRIUMPHS